**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி.</u>**

**<u>முன்னிலை : திரு.M. பொன்பாண்டி, பி.எ., பி.எல்.,</u>**

**<u>2026ம் ஆண்டு ஜூலை மாதம் 7ம் நாள் செவ்வாய்க்கிழமை</u>**

**<u>Cr.M.P.No.491/2026</u>**

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
பழனி அடிவாரம் கா.நி.கு.எண்.124/2025 **... மனுதாரர்**

**/எதிர்/**

காளிதாஸ், 44/2025
த/பெ.ராஜேந்திரன்,
100, மதனபுரம்,
அடிவாரம், பழனி,
திண்டுக்கல் மாவட்டம். **...எதிர்மனுதாரர்**

**<u>உத்தரவு</u>**

எதிரி துர்க்கைராஜ் என்பவர் Crl.M.P.No.427/2025ல் பிறப்பித்த உத்தரவின்படி நிபந்தனை கையொப்பம் செய்துள்ளார் என்றும், அதற்கு பிறகு அடிவாரம் காவல் நிலைய குற்ற எண்.100/2026ல் ஈடுபட்டுள்ளார் என்பதால் பிணை உத்தரவை ரத்து செய்யவேண்டுமென்று இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. பிணை உத்தரவில் சொல்லியுள்ள எல்லா நிபந்தனைகளையும் சரியாக பின்பற்றியுள்ளார் என்றும், எந்த நிபந்தனையையும் மீறவில்லை என்றும், அதனால் இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும், எதிருரை தாக்கல் செய்யப்பட்டு வாதம் முன்வைக்கப்பட்டது.

3. மனு, எதிருரை, பிணை உத்தரவு, ஆகியவற்றை பரிசீலனை செய்து பார்க்கும் போது இது போன்ற குற்றங்கள் செய்யக்கூடாது என்று எந்த நிபந்தனையும் Crl.M.P.No.427/2025, 22.05.2025ம் தேதியிட்ட உத்தரவில் விதிக்கப்படாமல் இருக்கும் காரணத்தினால் தற்போதுள்ள சூழ்நிலையின்படி இந்த எதிரி மேற்படி பிணை மனுவின் நிபந்தனையை மீறி மீண்டும் குற்றச்செயலில் ஈடுபடமாட்டார் என்று முன்வைத்திருக்கும் காரணத்திற்கு அடிப்படையாக எந்த நிபந்தனையும் அப்போது பிறப்பிக்கப்படவில்லை என்பதால், அந்த பிணை உத்தரவின்படியான பிணை ரத்து செய்யப்பட இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

4. மேற்கண்ட காரணம், விவாதம், பரிசீலனை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஜூலை திங்கள் 7ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.07 16:50:29 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**